## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

## C.C No.191/2019

## Deposition of Witness PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் அந்தியூரில் குடியிருந்து குவாலிட்டி மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். நான் பிஇ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். கடந்த 2012 ஆம் வருடம் நான் வேலை தேடிக் கொண்டிருந்த பொழுது எனது நண்பர் நவீன் மூலம் வித்யா ராணி என்பவர் அறிமுகமானார். வித்யாராணி அவருக்கு தெரிந்த ஹனிவல் அப்பார்ட்மெண்டில் வசித்து வரும் சூர்யா என்பவர் வெளிநாடுகளில் வேலை வாங்கி தருவதாக என்னிடம் கூறினார். அவர் கூறியதால் 2012 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் மூன்றாவது வாரத்தில் நான் எனது நண்பர்கள் நவீன், செந்தில்குமார் மற்றும் அவர்களது பெற்றோர்களும் வித்யா ராணி உடன்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.15 19:47:58 +0530

ஈரோடு சென்று சூர்யாவை அவரது வீட்டில் காலை 11 மணியளவில் சந்தித்து பேசினோம். அப்போது சூர்யாவின் தாய் அமிர்தவல்லியும் அவருடன் இருந்தார். சூர்யா எங்களது படிப்பு சம்பந்தமான விபரங்களை குறித்து தெரிந்து கொண்டு எங்களுக்கு சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறினார்.

மேலும் சூரியா அவருக்கு சிங்கப்பூர் உள்ளிட்ட பல வெளிநாடுகளில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகள் தெரியும் என்றும், பல பேர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாங்கி கொடுத்துள்ளதாகவும் எங்களிடம் கூறினார். மேற்படி வேலை சம்பந்தமாக ஒவ்வொரு நபரும் 2 லட்சத்து 92 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று எங்களிடம் கூறினார். அங்கிருந்த சூர்யாவின் தாயார் தான் நேதாஜி ரோடு, ஈரோட்டில் மாருதி காம்ப்ளக்ஸ் பைனான்ஸ் நிறுவனத்தை நடத்தி வருவதாக ஒரு விசிட்டிங் கார்டை எங்களிடம் காண்பித்து எனது மகன் கண்டிப்பாக வேலை வாங்கி கொடுத்து விடுவார் என எங்களிடம் கூறி எங்களை நம்ப வைத்தார்.

நாங்களும் அதற்கு சம்மதித்து 30.08.2012 ஆம் தேதி எங்களது கல்வி சான்றுகளுடன் சூர்யாவின் வீட்டிற்குச் சென்று கல்வி சான்றுகளையும், ஒவ்வொருவரும் ரூ.20,000/– பணமும் சூர்யாவிடம் கொடுத்தோம் பணம் கொடுக்கும் பொழுது சூர்யாவின் தாயார் அமிர்தவல்லியும் உடன் இருந்தார் மேற்படி பணத்தை பெற்றுக் கொண்டதற்கு பின்னிட்டு வேலை பார்க்க போகும் சிங்கப்பூர் நிறுவனம் மற்றும் என்ன வேலை சம்பளம் எவ்வளவு என்ற விவரங்களை இமெயில் மூலம் அனுப்பி வைத்தார். பின்னிட்டு ஒரு வாரம் கழித்து சூர்யா என்னை தொடர்பு கொண்டு உங்களுக்கு வேலை தயாராக இருப்பதாகவும் மேலும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பணத்தை கொண்டு

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.15 19:48:05 +0530

வரும்படி என்னிடம் கூறினார். நானும் ஒரு லட்சத்தை 60 ஆயிரத்தை ரொக்கமாக எடுத்துக்கொண்டு சூர்யாவின் வீட்டிற்கு சென்று சூர்யாவிடம் கொடுத்தேன். மேற்படி நான் கொடுத்த ஒரு லட்சத்து 60 ஆயிரம் பணத்திற்கு ஆதரவாக சூர்யாவின் தாய் அமிர்த வெள்ளி அவரது தனலட்சுமி வங்கி கணக்கு காசோலையை ஒரு லட்சத்து 60 ஆயிரம் தொகை பூர்த்தி செய்து 20.10.2012–ஆம் தேதியிட்டு கையெழுத்து செய்து கொடுத்தார் எங்களுக்கு வேலை உறுதியானவுடன் விசா கிடைத்தவுடன் மேற்படி காசோலையை திருப்பி கொடுத்து விட வேண்டும் என்று கூறினார்கள்.

பின்னிட்டு சூர்யா அவரது மொபைல் போனிலிருந்து எனக்கு தொடர்பு கொண்டு விசா வந்துவிட்டதாக மீதி பணத்தை எடுத்து வரும்படியும் காசோலையும் எடுத்து கொண்டு தன்னை ஈரோடு லீ ஜாடி ஹோட்டலுக்கு வந்து சந்தித்து கொடுத்துவிட்டு விசா வாங்கிச் செல்லும்படி கூறினார். நானும் நவீனும் மேற்படி ஹோட்டலுக்கு சென்று சூர்யாவை சந்தித்து தலா ஒரு லட்சத்து 12 ஆயிரம் பணத்தை அவரிடம் கொடுத்தோம். மேற்படி நாங்கள் கொடுத்த பணத்தை பெற்றுக் கொண்ட சூர்யா விசாவை எங்களிடம் கொடுத்தார். நான் வேலைக்காக சூர்யாவிடம் மொத்தம் 2 லட்சத்து 92 ஆயிரம் கொடுத்துள்ளேன்.

பின்னிட்டு எனது ஒரிஜினல் பாஸ்போர்ட் ஸ்டாம்பிங் செய்ய வேண்டும் என்று சொல்லி 02.11.2012 ஆம் தேதி ஈரோடு ராயல் பார்க் ஹோட்டலில் வைத்து எனது அசல் பாஸ்போர்ட்டை சூர்யா வாங்கிக் கொண்டார். அந்த சமயம் சூர்யா 05.11.2012 தேதி மாலை 6 மணிக்கு எனக்கு விமான டிக்கெட் கம்பெனி முகவரி அசல் பாஸ்போர்ட்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:48:13 +0530

சிங்கப்பூரில் நான் சந்திக்க போகும் நபர் போன்ற விபரங்களை கொடுப்பதாக சொன்னார். நானும் 05.11.2012 ஆம் தேதி சூர்யாவுக்கு தொடர்பு கொண்டு அது சம்பந்தமாக கேட்கலாம் என்று எண்ணி அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்ட போது அவரது செல்ஃபோன் அனைத்து வைக்கப்பட்டிருந்தது. நான் பலமுறை தொடர்பு கொண்டோம், அவரது செல்ஃபோன் அனைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. அதனால் சந்தேகம் கொண்டு ஈரோடு பெருந்துறை ரோட்டிற்கு சென்று அவரது வீட்டில் பார்த்தபோது, அவரது வீடு பூட்டி இருந்தது அக்கம் பக்கம் விசாரித்து பார்த்ததில் அவர்களது வீடு சுமார் ஒரு வார காலமாகவே பூட்டிய நிலையில் தான் உள்ளது என்று தெரிந்து கொண்டேன்.

பின்னிட்டு என்னை போலவே தர்மபுரி கேரளா மதுரை மற்றும் கிருஷ்ணகிரி பகுதியை சேர்ந்த மூர்த்தி, தம்பிதுரை, செல்வகுமார் உள்ளிட்ட பல நபர்களிடம் எங்களிடம் கூறியது போலவே வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி லட்சக்கணக்கில் பண மோசடி செய்துள்ளதாகவும், அவர்களிடமும் பாஸ்போர்ட் கல்வி சான்றுகள் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு மோசடி செய்து ஏமாற்றிவிட்டு தலைமுறை வாங்கிவிட்டதாக தெரிந்து கொண்டேன்.

பின்னிட்டு விசாரித்த பொழுது சூர்யா கொடுத்த விசாவும் போலியானது என்பதை தெரிந்து கொண்டேன். மேற்படி என்னை ஏமாற்றி மோசடி செய்த சூர்யா மீதும் அவர்கள் தாயார் அமிர்தவல்லி என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:48:21 +0530

காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். அவர் என்னை விசாரித்த போது சூர்யா எனக்கு கொடுத்த விசா மற்றும் அமிர்தவல்லி கொடுத்த காசோலைகளின் நகலை அவர்களிடம் ஒப்படைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சூர்யா கொடுத்த விசா (Employment pass) நகல் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அமிர்தவல்லி கொடுத்த காசோலை நகல் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:48:27 +0530

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE**

**C.C No.191/2019**

**Deposition of Witness PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வகுமார் | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் கிடைப்பையூர் கிராமத்தில் குடியிருந்து எனது தந்தையின் நர்சரியில் பணிபுரிந்து வருகிறேன். நான் பிஎஸ்சி ஹோட்டல் மேனேஜ்மென்ட் படித்துள்ளேன். கடந்த 2012 ஆம் வருடம் நான் வேலை தேடிக் கொண்டிருந்த பொழுது தம்பிதுரை ஹனிவல் அப்பார்ட்மெண்டில் வசித்து வரும் சூர்யா என்பவர் வெளிநாடுகளில் வேலை வாங்கி தருவதாக என்னிடம் கூறினார். அவர் கூறியதால் 2012 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் நான் தம்பிதுரை மற்றும் எனது அப்பா உடன் ஈரோடு சென்று சூர்யாவை அவரது வீட்டில் சந்தித்து பேசினோம். அப்போது சூர்யாவின் தாய் அமிர்த வல்லியும் அவருடன் இருந்தார்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:48:37 +0530

சூர்யா எனது படிப்பு சம்பந்தமான விபரங்களை குறித்து தெரிந்து கொண்டு எனக்கு சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறினார். மேலும் சூரிய அவருக்கு சிங்கப்பூர் உள்ளிட்ட பல வெளிநாடுகளில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகள் தெரியும் என்றும், பல பேர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாங்கி கொடுத்துள்ளதாகவும் என்னிடம் கூறினார்.

மேற்படி வேலை சம்பந்தமாக ரூ.3,12,000/-கொடுக்க வேண்டும் என்று என்னிடம் கூறினார். அதற்கு சம்மதித்து 28.09.2012 ஆம் தேதி எங்களது கல்வி சான்றுகளுடன் சூர்யாவின் வீட்டிற்குச் சென்று கல்வி சான்றுகளையும் ரூ,2,00,000/- பணமும் சூர்யாவிடம் கொடுத்தேன். பணம் கொடுக்கும் பொழுது சூர்யாவின் தாயார் அமிர்தவல்லியும் உடன் இருந்தார். மேற்படி நான் கொடுத்த ரூ,1,12,000/- பணத்திற்கு ஆதரவாக சூர்யாவின் தாய் அமிர்தவள்ளி அவரது தனலட்சுமி வங்கி கணக்கு காசோலையை ரூ.2,00,000/-தொகை பூர்த்தி செய்து கையெழுத்து செய்து கொடுத்தார். அப்போது எனது அப்பாவும் எனது மாமா பெரியசாமி உடன் இருந்தனர்.

எங்களுக்கு வேலை உறுதியானவுடன் விசா கிடைத்தவுடன் மேற்படி காசோலையை திருப்பி கொடுத்து விட வேண்டும் என்று கூறினார்கள். பின்னிட்டு சூர்யா அவரது மொபைல் போனிலிருந்து 28.10.2012 அன்று எனக்கு தொடர்பு கொண்டு விசா வந்துவிட்டதாக மீதி பணத்தை எடுத்து வரும்படியும், காசோலையும் எடுத்து கொண்டு தன்னை ஈரோடு லீ ஜாடி ஹோட்டலுக்கு வந்து சந்தித்து கொடுத்துவிட்டு விசா வாங்கிச் செல்லும்படி கூறினார்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:48:45 +05'30'

நானும் மேற்படி ஹோட்டலுக்கு சென்று சூர்யாவை சந்தித்து தலா ஒரு லட்சத்து 12 ஆயிரம் பணத்தை அவரிடம் கொடுத்தேன். மேற்படி நான் கொடுத்த பணத்தை பெற்றுக் கொண்ட சூர்யா விசாவை என்னிடம் கொடுத்தார். நான் வேலைக்காக சூர்யாவிடம் மொத்தம் 3 லட்சத்து 12 ஆயிரம் கொடுத்துள்ளேன். அந்த சமயம் சூர்யா 05.11.2012 தேதி மாலை 6 மணிக்கு எனக்கு விமான டிக்கெட், கம்பெனி முகவரி, அசல் பாஸ்போர்ட், சிங்கப்பூரில் நான் சந்திக்க போகும் நபர் போன்ற விபரங்களை கொடுப்பதாக சொன்னார்.

அந்த சமயத்தில் அந்தியூரை சேர்ந்த நவீன் மற்றும் பாலமுருகன் ஆகியோரும் அங்கு வந்திருந்தார்கள். அவர்களிடமும் சூர்யா பணம் வாங்கிக் கொண்டு விசாவை கொடுத்தார். பின்னிட்டு எனது ஒரிஜினல் பாஸ்போர்ட் ஸ்டாம்பிங் செய்ய வேண்டும் என்று சொல்லி 02.11.2012 ஆம் தேதி ஈரோடு ராயல் பார்க் ஹோட்டலில் வைத்து எனது அசல் பாஸ்போர்ட்டை சூர்யா வாங்கிக் கொண்டார். நானும் 05.11.2012 ஆம் தேதி சூர்யாவுக்கு தொடர்பு கொண்டு அது சம்பந்தமாக கேட்கலாம் என்று எண்ணி அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்ட போது அவரது செல்ஃபோன் அனைத்து வைக்கப்பட்டிருந்தது.

நான் பலமுறை தொடர்பு கொண்டும் அவரது செல்ஃபோன் அனைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. அதனால் சந்தேகம் கொண்டு ஈரோடு பெருந்துறை ரோட்டிற்கு சென்று அவரது வீட்டில் பார்த்தபோது அவரது வீடு பூட்டி இருந்தது. அக்கம் பக்கம் விசாரித்து பார்த்ததில் அவர்களது வீடு சுமார் ஒரு வார காலமாகவே பூட்டிய நிலையில் தான் உள்ளது என்று

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.15 19:48:57 +0530

தெரிந்து கொண்டேன். பின்னிட்டு என்னை போலவே தர்மபுரி, கேரளா, மதுரை மற்றும் கிருஷ்ணகிரி பகுதியை சேர்ந்த பல நபர்களிடம் நபர்களிடம் எங்களிடம் கூறியது போலவே வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி லட்சக்கணக்கில் பண மோசடி செய்துள்ளதாகவும், அவர்களிடமும் பாஸ்போர்ட் கல்வி சான்றுகள் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு மோசடி செய்து ஏமாற்றிவிட்டு தலைமுறை வாங்கிவிட்டதாக தெரிந்து கொண்டேன்.

பின்னிட்டு விசாரித்த பொழுது சூர்யா கொடுத்த விசா போலியானது என்பதை தெரிந்து கொண்டேன். மேற்படி என்னை ஏமாற்றி மோசடி செய்த சூர்யா மீதும் அவர்கள் தாயார் அமிர்தவல்லி என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி எங்களைப் போலவே பாதிக்கப்பட்ட நபரான பாலமுருகன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். அவர் என்னை விசாரித்த போது நான் சூர்யாவிடம் கொடுத்த பாஸ்போர்ட் பட்டப்படிப்பு டிகிரி ப்ரொவிஷனல் சான்றுகளின் நகல்களை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். **மேற்படி சூர்யா கொடுத்த விசா (Employment pass) நகல் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாஸ்போர்ட் நகல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டப்படிப்பு, Provisional சான்றிதழ்கள்களின் நகல்கள் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:49:04 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

C.C No.191/2019

Deposition of Witness PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் கிடைப்பையூர் கிராமத்தில்குடியிருந்து, நர்சரி வைத்து நடத்தி வருகிறேன். எனது மகன் செல்வகுமார் பிஎஸ்சி ஹோட்டல் மேனேஜ்மென்ட் படித்துள்ளான். கடந்த 2012 ஆம் வருடம் எனது மகன் வேலை தேடிக் கொண்டிருந்த பொழுது எனது மகனின் நண்பர் தம்பிதுரை என்பவர் ஹனிவல் அப்பார்ட்மெண்டில் வசித்து வரும் சூர்யா என்பவர் வெளிநாடுகளில் வேலை வாங்கி தருவதாக கூறியதால் 2012 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் நான் தம்பிதுரை மற்றும் எனது மகன் உடன் ஈரோடு சென்று சூர்யாவை அவரது வீட்டில் சந்தித்து பேசினோம். அப்போது சூர்யாவின் தாய் அமிர்த வில்லியும் அவருடன் இருந்தார் சூர்யா எனது படிப்பு சம்பந்தமான விபரங்களை

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.15 19:49:12 +0530

குறித்து தெரிந்து கொண்டு எனக்கு சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறினார். மேலும் சூரியா அவருக்கு சிங்கப்பூர் உள்ளிட்ட பல வெளிநாடுகளில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகள் தெரியும் என்றும், பல பேர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாங்கி கொடுத்துள்ளதாகவும் கூறினார்.

மேற்படி வேலை சம்பந்தமாக ரூ.3,12,000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு சம்மதித்து 28.09.2012 ஆம் தேதி எங்களது கல்வி சான்றுகளுடன் சூர்யாவின் வீட்டிற்குச் சென்று கல்வி சான்றுகளையும் ரூ.2,00,000/- பணமும் சூர்யாவிடம் கொடுத்தோம். பணம் கொடுக்கும் பொழுது சூர்யாவின் தாயார் அமிர்தவல்லியும் உடன் இருந்தார். மேற்படி நான் கொடுத்த ரூ,1,12,000/- பணத்திற்கு ஆதரவாக சூர்யாவின் தாய் அமிர்தவள்ளி அவரது தனலட்சுமி வங்கி கணக்கு காசோலையை ரூ.2,00,000/-தொகை பூர்த்தி கையெழுத்து செய்து கொடுத்தார்.

அப்போது எனது மகன் மற்றும்பெரியசாமிஉடன் இருந்தனர். எங்களுக்கு வேலை உறுதியானவுடன் விசா கிடைத்தவுடன் மேற்படி காசோலையை திருப்பி கொடுத்து விட வேண்டும் என்று கூறினார்கள். பின்னிட்டு சூர்யா அவரது மொபைல் போனிலிருந்து 28.10.2012 அன்று எனது மகனுக்கு தொடர்பு கொண்டு விசா வந்துவிட்டதாகவும், மீதி பணத்தை எடுத்து வரும்படியும், காசோலையும் எடுத்து கொண்டு தன்னை ஈரோடு லீ ஜாடி ஹோட்டலுக்கு வந்து சந்தித்து கொடுத்துவிட்டு விசா வாங்கிச் செல்லும்படி கூறினார்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:49:18 +0530

எனது மகன் மேற்படி ஹோட்டலுக்கு சென்று சூர்யாவை சந்தித்து தலா ஒரு லட்சத்து 12 ஆயிரம் பணத்தை அவரிடம் கொடுத்து விசாவை பெற்று வந்தார். நாங்கள் வேலைக்காக சூர்யாவிடம் மொத்தம் 3 லட்சத்து 12 ஆயிரம் கொடுத்துள்ளோம். அந்த சமயம் சூர்யா 05.11.2012 தேதி மாலை 6 மணிக்கு எனது மகன் விமான டிக்கெட், கம்பெனி முகவரி, அசல் பாஸ்போர்ட், சிங்கப்பூரில் சந்திக்க போகும் நபர் போன்ற விபரங்களை கொடுப்பதாக சொன்னார்.

பின்னிட்டு எனது மகன் ஒரிஜினல் பாஸ்போர்ட் ஸ்டாம்பிங் செய்ய வேண்டும் என்று சொல்லி 02.11.2012 ஆம் தேதி ஈரோடு ராயல் பார்க் ஹோட்டலில் வைத்து எனது மகன் அசல் பாஸ்போர்ட்டை சூர்யா வாங்கிக் கொண்டார். எனது மகன் 05.11.2012 ஆம் தேதி சூர்யாவுக்கு தொடர்பு கொண்டு அது சம்பந்தமாக கேட்கலாம் என்று எண்ணி அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்ட போது அவரது செல்ஃபோன் அனைத்து வைக்கப்பட்டிருந்தது. எனது மகன் பலமுறை தொடர்பு கொண்டும் அவரது செல்ஃபோன் அனைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது.

அதனால் சந்தேகம் கொண்டு ஈரோடு பெருந்துறை ரோட்டிற்கு சென்று அவரது வீட்டில் பார்த்தபோது, அவரது வீடு பூட்டி இருந்தது. அக்கம் பக்கம் விசாரித்து பார்த்ததில் அவர்களது வீடு சுமார் ஒரு வார காலமாகவே பூட்டிய நிலையில் தான் உள்ளது என்று தெரிந்து கொண்டேன் பின்னிட்டு என்னை போலவே தர்மபுரி கேரளா மதுரைமற்றும் கிருஷ்ணகிரி பகுதியை சேர்ந்த பல நபர்களிடம் நபர்களிடம் எங்களிடம் கூறியது போலவே வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி லட்சக்கணக்கில் பண மோசடி

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:49:25 +0530

செய்துள்ளதாகவும், அவர்களிடமும் பாஸ்போர்ட் கல்வி சான்றுகள் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு மோசடி செய்து ஏமாற்றிவிட்டு தலைமறைவாகி விட்டதாக தெரிந்து கொண்டேன்.

பின்னிட்டு விசாரித்த பொழுது சூர்யா கொடுத்த விசா போலியானது என்பதை தெரிந்து கொண்டோம். மேற்படி எங்களை ஏமாற்றி மோசடி செய்த சூர்யா மீதும் அவர்கள் தாயார் அமிர்தவல்லி என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி எங்களைப் போலவே பாதிக்கப்பட்ட நபரான பாலமுருகன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:49:31 +0530

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE**

**C.C No.191/2019**

**Deposition of Witness PW 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : தம்பிதுரை | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தர்மபுரி நாயக்கன் கொட்டாயில் குடியிருந்து, பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். நான் பிஎஸ்சி கேட்டரிங் முடித்து எம்பிஏ முடித்துள்ளேன். கடந்த 2012 ஆம் வருடம் நான் வேலை தேடிக் கொண்டிருந்த பொழுது எனது நண்பர் பாலமுருகன் மூலம் வித்யா ராணி என்பவருக்கு தெரிந்த சூர்யா என்பவர் வெளிநாடுகளில் வேலை வாங்கி தருவதாக என்னிடம் கூறினார். அவர் கூறியதால் 2012 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் நான் எனது நண்பர் அழகேசன் உடன் ஈரோடு சென்று சூர்யாவை பெருந்துறை ரோட்டில் உள்ள ஹனிவெல் அப்பார்ட்மெண்டில் அவரது வீட்டில் காலை 11 மணியளவில் சந்தித்து பேசினோம். அப்போது சூர்யாவின் தாய் அமிர்த வல்லியும் அவருடன் இருந்தார்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.15 19:49:39 +0530

சூர்யா எங்களது படிப்பு சம்பந்தமான விபரங்களை குறித்து தெரிந்து கொண்டு எனக்கு சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறினார். எனக்கு நல்ல சம்பளத்தில் சிங்கப்பூரில் உள்ள **FAN PASIFIC** என்ற பைவ் ஸ்டார் ஹோட்டலில் கொடுப்பதாக கூறினார்.

மேலும் சூரிய அவருக்கு சிங்கப்பூர் உள்ளிட்ட பல வெளிநாடுகளில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகள் தெரியும் என்றும், பல பேர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாங்கி கொடுத்துள்ளதாகவும் எங்களிடம் கூறினார். மேற்படி வேலை சம்பந்தமாக மூன்று லட்சமும், விமான டிக்கெட்க்கு 12 ஆயிரம், மொத்தம் மூன்று லட்சத்து 12 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று என்னிடம் கூறினார். அதற்கு சம்மதித்து 15.09.2012ஆம் தேதி எங்களது கல்வி சான்றுகளுடன் சூர்யாவின் வீட்டிற்குச் சென்று கல்வி சான்றுகளையும் ஒவ்வொருவரும் ரூ.1,80,000/- பணமும் சூர்யாவிடம் கொடுத்தோம்.

பணம் கொடுக்கும் பொழுது சூர்யாவின் தாயார் அமிர்தவள்ளியும் உடன் இருந்தார். மேற்படி பணத்திற்கு ஆதரவாக சூர்யாவின் தாய் அமிர்தவள்ளி அவரது தனலட்சுமி வங்கி கணக்கு காசோலையை ரூ.1,80,000/-தொகை பூர்த்தி செய்து கையெழுத்து செய்து கொடுத்தார். எங்களுக்கு வேலை உறுதியானவுடன், விசா கிடைத்தவுடன் மேற்படி காசோலையை திருப்பி கொடுத்து விட வேண்டும் என்று கூறினார்கள். பின்னிட்டு சூர்யா அவரது மொபைல் போனிலிருந்து எனக்கு தொடர்பு கொண்டு விசா வந்துவிட்டதாக மீதி பணத்தை எடுத்து வரும்படியும் காசோலையும் எடுத்து கொண்டு தன்னை

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:49:45 +0530

ஈரோடு லீ ஜாடி ஹோட்டலுக்கு வந்து சந்தித்து கொடுத்துவிட்டு விசா வாங்கிச் செல்லும்படி கூறினார்.

நானும் மேற்படி ஹோட்டலுக்கு சென்று சூர்யாவை சந்தித்து ஒரு லட்சத்து 12 ஆயிரம் பணத்தை அவரிடம் கொடுத்தோம். மேற்படி நாங்கள் கொடுத்த பணத்தை பெற்றுக் கொண்ட சூர்யா விசா நகலை என்னிடம் கொடுத்தார். அந்த சமயத்தில் அந்தியூரை சேர்ந்த நவீன் மற்றும் பாலமுருகன் ஆகியோரும் அங்கு வந்திருந்தார்கள். நான் வேலைக்காக சூர்யாவிடம் மொத்தம் 2 லட்சத்து 92 ஆயிரம் கொடுத்துள்ளேன். பின்னிட்டு எனது ஒரிஜினல் பாஸ்போர்ட் ஸ்டாம்பிங் செய்ய வேண்டும் என்று சொல்லி 02.11.2012 ஆம் தேதி ஈரோடு ராயல் பார்க் ஹோட்டலில் வைத்து எனது அசல் பாஸ்போர்ட்டை சூர்யா வாங்கிக் கொண்டார். அந்த சமயம் சூர்யா 05.11.2012 தேதி மாலை 6 மணிக்கு எனக்கு விமான டிக்கெட், கம்பெனி முகவரி, அசல் பாஸ்போர்ட், சிங்கப்பூரில் நான் சந்திக்க போகும் நபர் போன்ற விபரங்களை கொடுப்பதாக சொன்னார்.

நானும் 05.11.2012 ஆம் தேதி சூர்யாவுக்கு தொடர்பு கொண்டு அது சம்பந்தமாக கேட்கலாம் என்று எண்ணி அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்ட போது அவரது செல்ஃபோன் அணைத்து வைக்கப்பட்டிருந்தது. நான் பலமுறை தொடர்பு கொண்டும் அவரது செல்ஃபோன் அனைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. அதனால் சந்தேகம் கொண்டு ஈரோடு பெருந்துறை ரோட்டிற்கு சென்று அவரது வீட்டில் பார்த்தபோது அவரது வீடு பூட்டி இருந்தது. அக்கம் பக்கம் விசாரித்து பார்த்ததில் அவர்களது வீடு சுமார் ஒரு வார காலமாகவே பூட்டிய நிலையில் தான் உள்ளது என்று

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.15 19:49:51 +0530

தெரிந்து கொண்டேன். பின்னிட்டு என்னை போலவே தர்மபுரி , கேரளா, மதுரை மற்றும் கிருஷ்ணகிரி பகுதியை சேர்ந்த மூர்த்தி, செல்வகுமார் உள்ளிட்ட பல நபர்களிடம் நபர்களிடம் எங்களிடம் கூறியது போலவே வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி லட்சக்கணக்கில் பண மோசடி செய்துள்ளதாகவும், அவர்களிடமும் பாஸ்போர்ட் கல்வி சான்றுகள் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு மோசடி செய்து ஏமாற்றிவிட்டு தலைமறைவாகி விட்டதாக தெரிந்து கொண்டேன்.

பின்னிட்டு விசாரித்த பொழுது சூர்யா கொடுத்த விசாவும் போலியானது என்பதை தெரிந்து கொண்டேன். மேற்படி என்னை ஏமாற்றி மோசடி செய்த சூர்யா மீதும் அவர்கள் தாயார் அமிர்தவள்ளி என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி என்னை போலவே பாதிக்கப்பட்ட நபரான பாலமுருகன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். அவர் என்னை விசாரித்த போது நான் சூர்யாவிடம் கொடுத்த பாஸ்போர்ட், பட்டப்படிப்பு டிகிரி, ப்ரொவிஷனல், **Consolidated Mark Sheet, Visa** சான்றுகளின் நகல்களைஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். **மேற்படி சூர்யா கொடுத்த விசா (Employment pass) நகல் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாஸ்போர்ட் நகல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டப்படிப்பு, Consolidated நகல் சான்றிதழ்கள்களின் நகல்கள் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மறுவிசாரணைஇல்லை.**

S
RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.15 19:49:58 +0530